ஓம் சரவணபவ!




921
ஜோர
SL/PR

வாழ்வாங்கு வாழ்ந்தவரை
வழியனுப்புகிறோம் வான்உலகு.

# நினைவு மலர்

15-05-2002

உ
சிவமயம்




## விநாயகர் துதி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

உ

ஓம் கணபதி துணை



# கண்ணீர் நிறைந்த காணிக்கை!!

எனது இல்லத்தரசரும்,

எமது இதயத்தெய்வமுமான

**திரு. வேலுப்பிள்ளை சபாரத்தினம் அவர்கள்** தம்

தூய ஆத்மா எல்லாம் வல்ல

இறைவன் திருவடிகளில் நிலையான

நித்திய ஆத்மசாந்தி பெறவேண்டும்

எனப் பிரார்த்தித்து இந்நினைவு மலர்தனை

அவர்தம் பாதங்களில் எமது கண்ணீர் நிறைந்த

காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்,

**மனைவி, மக்கள்,**

**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த

**அமரர் திரு. வேலுப்பிள்ளை சபாரத்தினம்**

**அவர்கள்**

| | |
|---|---|
| தோற்றம் :- | ஏற்றம்:- |
| **22-06-1922** | **15-04-2002** |

## திதி வெண்பா

சீரோங்கு சித்ரபானு வருடச் சித்திரைத் திங்கள் இரண்டாம் நாள்
பேரோங்கு பூர்வபக்கத் திருதியையில் - ஏரோர் போற்றும்
வேலுப்பிள்ளை சபாரத்தினம் தான் வையகம் நீங்கி
வேலும் மயிலுமுடையான் அடி சென்ற திதி காண்.

# அமரர் திரு. வே. சபாரத்தினம் அவர்கள்தம்

# வாழ்க்கை வரலாறு

இலங்கையின் வடபால் அமைந்த யாழ்/ அத்தியடியில், மாவிட்டபுரத்து மரபுயர் வேளாண் மரபில் வந்த வேலுப்பிள்ளைக்கும் யாழ்/ அத்தியடியைச் சேர்ந்த இராசம்மாவுக்கும் இவர் 2வது மகனாகப் பிறந்தார். 1922ம் திகதி ஆனித் திங்கள் 22ம் திகதி அவதரித்த இவர், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளையை அண்ணனாகவும், காலஞ்சென்ற திருமதி. தனேஸ்வரி விக்கினராஜாவைச் சகோதரியாகவும் பெற்றார்.

பெற்றோரின் அன்புநிறை அரவணைப்பில் வளர்ந்த இவர் பள்ளிப்பருவம் எய்தியதும் ஆனைப்பந்தியடி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தன் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். பின் யாழ்/ மத்திய கல்லூரியில் Matriculation பரீட்சையில் சித்தி எய்திக் கல்லூரி வாழ்க்கையை முடித்துக் கொண்டார். கல்வி கற்குங்கால் கிரிக்கெற்றில் மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்கிய இவர், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குகொண்டு வெற்றியீட்டினார்.

திடமான உடல்வாகு, மிடுக்கான தோற்றம், சிறு நொடியிலேயே மற்றவர் மனதைப் புரிந்துகொள்ளும் திறன் இவையெல்லாம் அமையப்பெற்ற அமரர் சீருடை அணியும் உத்தியோகத்தைப் பெரிதும் விரும்பினார். அதன்படியே 1943ம் ஆண்டு ஆவணித்திங்கள் 16ம் நாள் தன் 21வது வயதில் கலால் திணைக்களத்தில் பரிசோதகராகக் கடமையேற்றார். துணிவும் வீரமும்

மிக்க இவர் தன் கடினமான உழைப்பாலும் திறமை யாலும் படிப்படியாகப் பதவியுயர்வு பெற்று ஓய்வுபெறுங் கால் உதவிக் கலால் ஆணையாளர் எனும் பதவியை வகித்தார். இவரின் திறமையான அணுகு முறையைப் போற்றாத மேல் அதிகாரிகளே இல்லையெனலாம். இவரின் கீழ்க் கடமை புரிந்தோரும் இவர்பால் மிகுந்த அன்பும், மதிப்பும் உடையோராக இன்றும் இருப்பது குறிப்பிட வேண்டியது. இன்றுகூடக் கலால் திணைக் களத்தினர் இவரைப் பற்றிக் கூறும்போது 'He was a lion in our department" எனக்கூறுவர்.

இத்துணை மதிப்பிற்கும், பெருமைக்குமுரிய இவர் 1953ம் ஆண்டு மாசித்திங்கள் 6ம் நாள் வயாவிளான் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை - சுப்பிரமணியத்தின் 2வது மகள் யோகமணியை தன் மனைவியாகக் கொண்டார். கண்டவர்கள் "இவர்கள் காதல் திருமணத் தம்பதிகளா?" என வியக்கும் வண்ணம் அத்துணை மனமொத்த தம்பதியினராக இல்லறத்தை நல்லறமாகக் கொண்டனர். அதன்பேறாக சிவகுமார், ஷாந்தகுமார், பிரேம்குமார், ராஜ்குமார், சூரியகுமார் எனும் ஐந்து ஆண்மக்களையும், அருமையாகச் சுபாஷினி எனும் மகளையும் பிள்ளைகளாகக் கொண்டார். பிள்ளைகட்கு நல்ல வாழ்க்கைத் துணைகளையும் தேடிக்கொடுத்தார். குடும்பத்தில் குன்றாத வாஞ்சையும் அக்கறையும் கொண்ட இவர் தன் பிள்ளைகளின் நலனுக்காகப் பெரிதும் உழைத்தார். பிள்ளைகளில் மட்டுமல்ல பேரப்பிள்ளைகளிலும் மிக மிகப் பாசமுடையவர். அவர்கள் எல்லாம் தன்னைச் சுற்றி இருப்பதைப் பெரிதும் விரும்புவார். தான் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும்கூட "என் பேத்தி பிரஷோ எப்போ ருது



வாகுவாள்?", "என் மூத்தபேத்தி வீணாவின் விவா கத்தைக் கெதியில் வைக்கவேண்டும்" என்றெல்லாம் அவர் அடிக்கடிக் கூறுவது - (இல்லை புலம்புவது என்றே கூறலாம்) அவரின் பாசத்தைக் கூறும் ஓர் சான்று. அவரின் உணர்வுகளை, பாசத்தை மதித்த பிள்ளைகளும், பேரக்குழந்தைகளும் தங்கள் தேவை களைப் பெரிதனக் கருதாமல், அவர் மனம் நோகாமல் நடந்துகொண்டதுகூட அவர் செய்த பாக்கியமே.

இத்துணை பெருமை படைத்த பெருந்தகை தன் 79வது வயதின் ஆரம்பத்தில் நோய்வாய்ப்பட்டார். எதையும் தாங்கும் இதயம் கொண்ட அவர், நோயின் தாக்கம் பெரிதாக இருந்தபொழுதுங்கூட தன் மனத் திடத்தைக் கைவிட்டாரில்லை. "அடுத்த வருடம் நல்லூர் போவேன், கதிர்காமம் போவேன், திருச்செந்தூர் போகவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே இருப்பார் இந்த முருக பக்தன்.

விதிக்கு விலக்கானார் யார்? இறைவன் தன் தாளிற்கு இனிய மலரொன்று வேண்டுமென விழைந் தான். சித்திரபானு வருடம் சித்திரைத் திங்கள் 2ம் நாள் திங்கட்கிழமை நடுப்பகல், சுற்றஞ்சூழ, மகன் சூரியகுமார் திருநீற்றை அவர் நெற்றியில் அணிந்து, வாயிலிட, அன்னாரின் ஆத்மா அமலனை அடைந்தது. அவரின் வயது 79 ஆக இருந்தாலும்கூட அன்னாரின் பிரிவு அக்குடும்பத்தை உலுக்கிவிட்டதைக் காண முடிகிறது.

பிறந்தோர் இறப்பது யதார்த்தம். எனவே அன்னா ரின் ஆத்ம சாந்திக்காக அமலனை வேண்டுவோம் அனைவரும்.

சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

# என்னவரே! என் உயிரே!

“எந்தையும் தாயும் சிந்தை மகிழ்ந்து
இணைத்தனர் எம்மை இல்லற வாழ்வில்”

1953ம் ஆண்டு தைத்திங்கள் 20ம் நாள் உங்கள் கைத்தலம் பற்ற மனைவி எனும் ஸ்தானம் எனக்குக் கிடைக்கிறது. நாற்பத்தொன்பது வருடங்களாக உங் களுடன் நான் வாழ்ந்த பெருமையும் இனிமையும் நிறைந்த ஒவ்வொரு நாட்களையும் எண்ணிப் பார்க் கிறேன். பசுமை நிறைந்த இனிய நினைவுகள் என் உளத்தே அலைமோதுவதால் என்னால் எதையுமே ஒழுங்குபட எழுதமுடியவில்லை.

என்னவரே! உங்கள் இதயத்தில் எனக்கு அளித்த இடம். அன்பு நிறைந்த அரவணைப்பு, வசதிபடைத்த வாழ்க்கை இவற்றையெல்லாம் நினைக்க, நினைக்க நெஞ்சு குமுறுகிறது. எங்களிடையே கருத்து வேறு பாடுகளோ, வாய்த்தர்க்கங்களோ இடம்பெற்றதில்லை யென நான் பொய் சொல்லப் போவதில்லை. ஆனால் நாங்கள் ஒருவரையொருவர் புரிந்து, விட்டுக்கொடுத்து வாழ்ந்தோம். அப்பா! நான் எதைச் செய்ய விரும்பி னாலும் அதை நிறைவேற்றுவது உங்கள் கடன் என நீங்கள் நினைத்தீர்கள். எந்த நேரத்திலும் உங்கள் மனம் நோகாது செயல்படுவது என் கடமையென நான் நினைத்தேன். உங்கள் கடைசி நாட்களில் கூட, என் சுகம் பாராது உங்கள் அருகிருந்து பணிவிடை செய்ததில் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தேன். உங்கள் இறுதி உணவைக் கூட என் கையால் தான்



சாப்பிடுவேன் என நீங்கள் பிடிவாதம் பிடித்ததை எண்ணி எண்ணி இன்னும் கண்ணீர் வடிக்கிறேன்.

என்னவரே! நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை நிறை வானது, மகிழ்ச்சியானது. ஒருவன் தன் வாழ்நாளில் எதையெல்லாம் அநுபவிக்க விழைகிறானோ அதை யெல்லாம் அநுபவித்த பாக்கியசாலி நீங்கள். பாசமும் கடமையுணர்வும் மிக்க பிள்ளைகளை இறைவன் எமக்கு அளித்தான். அங்ஙனம் பிள்ளைகளை உரு வாக்கியதும் நீங்கள் படைத்த சாதனைதான். நான் முந்தி, நீ முந்தி என முன்னின்று அவர்கள் எங்களைத் தாங்கினார்கள், தாங்குவார்கள். அவர்களின் பணியில் நீங்கள் அடைந்த சந்தோஷமும் நான் அறிவேன். எங்கள் மருமக்கள் கூட உங்களை மாமா என நினைத்ததில்லை. தந்தை என்ற ஸ்தானத்தில் வைத்துத்தான் அன்பு காட்டினார்கள். உங்களிடம் வந்துபோகும் பொழுதெல்லாம் உங்கள் கைகளை அணைத்து உச்சியில் முத்தமிடுவார்களே. இந்தப்பேறு எல்லோர்க்கும் கிடைப்பதில்லையே. அப்பா! பேரக்குழந் தைகளிடம் நீங்கள் காட்டிய வாஞ்சை, விசேடமாகப் பேரன் கண்ணனை (தர்ஷனனை) உங்கள் உயிரெனக் கருதியது. அறிவிழக்கும் இறுதிநிலையிலும் அவனை இறுக அணைத்து முத்தமிட்டது, இவையெல்லாம் உங்கள் பாசத்தின் உச்சமப்பா. அவர்களின் கல்வி யில், குணநலனில், வாழ்வில் எத்துணை அக்கறை உங்கட்கு!

என் தெய்வமே! இறைபக்தியும், விருந்தோம்பலும் உங்களிடம் கூடப்பிறந்தவை. மூன்றுவேளையும் முகம் கழுவித் திருநீறு அணியாமல் நீங்கள் உணவு

உண்டதை நான் கண்டதில்லை. வீட்டுக்கு யார் வந்தாலும் ‘சாப்பிடுங்கோ’ என்பது தான் உங்கள் உபசரிப்பு. நீங்கள் கடமைபுரிந்த கலால் திணைக் களத்தில் உங்களுக்கு இருந்த மதிப்பு இன்னுமே குறையவில்லை. உங்கள் இழப்பிற்கு அநுதாபம் தெரிவிக்கும்போது கூட உங்கள் செயல்திறனையும், குணநலனையும் தான் அவர்கள் முதலில் குறிப்பிடுகிறார்கள். எத்துணை பெருமையப்பா எங்கட்கு உங்களால்!

வாழ்வில் மட்டுமல்ல உங்கள் சாவிலுமே எல்லோர்க்கும் சாற்றொணாப் பெருமையைச் சாலவே சேர்த்துவிட்டீர்கள்.

என்னவரே! ஏதேதோ எழுதிவிட்டேன். எல்லாம் உங்கட்குத்தெரிந்தவை தானே என்பார்கள் இங்குள்ளோர். பிழை, சரி நோக்கும் மனநிலை எனக்கில்லை. கடந்தகால நினைவு மலர்களை மாலையாகக் கோர்த்து என் மனம் ஆறுதலடைய, என் வேதனையின் வடிகாலாக என் உயிராம் உங்களை விழித்தெழுதுவது தான் நான் கண்ட ஆறுதல்.

என் தெய்வமே! கடைசியாக ஒன்றே ஒன்று. என்னால் இந்த வெறுமையான இனி வாழவே முடியாது. வாழ்வில் எமை இணைத்த இறைவன் சாவிலும் எமை இணைக்க வேண்டும். நீங்கள் விரைவில் என்னை உங்களிடம் அழைக்கவேண்டும். இதுதான் என் இறுதிவேண்டுகோள். உங்களிடம் - இறைவனிடம்.

**உங்கள்**
**உயிரனையள்.**



## *Loving Thatha*

Dear Thatha,

It has been a week since you passed away, yet I still can't accept it. You have always been such an important part of my life, and I cannot imagine the years ahead without you there by our sides. There is so much about you that I will miss in the years to come, so much that you have given us and taught us.

I will miss hearing your voice on the telephone every week, promising to send us a letter and always asking how Nikki and I were faring at university. Even in the latter stages of your illness, you would reassure us that you were fine and that you were looking forward to seeing us in June. I have always admired your resilience and your ability to be positive in the face of adversity. I know that if you were here now, you would tell us to cheer up; to look after Ammamma and to be strong.

I will miss your presence during our holiday visits to Colombo, where we would do the crossword together and fight for control of the television remote. You would make sure I followed house rules - "No TV after 10 pm, tie your hair up when you go outside" - but you always went out of your way to see that I was happy. I still remember Ammamma telling me about how you had the VCR fixed just before we came so that I could watch

Tamil videos. You'd always save back copies of Reader's Digest for my holiday, and remind Sasi Anna to make sure that there were extra appalams for me at lunch.

I will miss hearing you say "Pethi! Inga vanthu enda muthuhai orukaa sori!" Although you played the role of the stern Thatha, there was a myriad of ways in which you showed your affection for us. You loved having your grandchildren around you, and would often ask us to massage your scalp or knead your feet while you had your afternoon nap. In the evenings, you would frequently play Santa and hand out goodies; sneaking them to us when our parents weren't looking. Sometimes, you would try and convince us to join you in drinking soup - but more often than not, a visit to Thatha's house led to lots of chocolates!

I will miss being a part of the love that you and Ammamma shared. You were always there for one another, and even after 49 years of marriage, I have never heard either of you address each other by name - it was always "Darlo" or "Kunchu". No matter what the situation, you went out of your way to accommodate one another. I have never met anyone who shared and understanding and love that was as deep as yours. You were the epitome



of the ultimate couple, and you have shaped my ideal of the perfect marriage.

In two months time, it will be your 80th birthday - or as you would say, "Just four score years, my dear". Your zest for life always amazed me; you enjoyed each day tremendously and always looked forward to what lay ahead. Perhaps it was your devoutness that lent you such enthusiasm - you knew that come what may, it would always be for the best. I will miss you terribly Thatha, we all will. But I know that you're in a better place now, somewhere there is no pain or suffering. You have given us a lifetime of memories to remember you by - as a wonderful husband, a loving father, an adorable grandfather and a perfect gentleman. And though I miss you, I know that you will always be here, watching over us.

**Love Always,**

**Veena Kutti ("Prof.")**

# Take care Thathoi!

I'm not sure where to start or how to put into words the many thoughts and memories which have resurfaced since last week. It's painful to finally confront the fact that I will never be able to see my Thathoi again, I thought that I would be able to accept his loss - but what I'm feeling right now tells me that I was wrong.

Since Thathoi fell seriously ill last year, the whole family - especially Ammamma and Sashi anna - has shared his pain and suffering. It has been a daily battle for us, it almost felt like we were sitting on a time bomb - we knew this eventually had to happen, but not knowing when or how.

Now as I sit here looking through the photo albums, I'm reminded of so many little incidents which helped form the special bond that God had intended for me and my Thathoi.

I remember the first time Thathoi yelled at me, I got so angry that I announced I was leaving home (at the age of seven!) and ran down the street. He came running after me and gave me couple of sharp slaps in full view of the neighbours and took me back home. Yet this was the same man who let me sleep on his stomach as he snored like a lion and rocked me in his saram while we watched TV together. Even at that age Thatha taught acca and me



discipline (the old-fashioned way!) but he also showered us with so much love and generosity.

I can't ever remember asking Thathoi for anything and being turned away. When I was only five, Thathoi had been advising me to stop sucking my thumb, but to no avail. Finally I made a childish deal - if he stopped smoking cigars, I would stop sucking my thumb! As usual, he kept his word and I was so moved that Thathoi actually gave up on a life-long habit for me.


At a very young age, it was Thathoi who taught me the importance of discipline and faith in God. Whenever I was in Ceylon or India, he would take me to the temple and promise me a faluda at Bombay Sweetmart on the way home. At that age, I just followed him around - but today, I truly appreciate what he did for me. He would always say that Lord Muruga will give us a helping hand in our toughest times and make us stronger. Ironically, I repeated the same thing to him last year when he was first admitted to hospital. Whenever I asked Thathoi how he was, he would say, "Your prayers and Baba are looking after me".

Today Thathoi, you are no longer with me in person but what you once taught me has shaped me into the person that I am today. Amma often tells me that I resemble you in character and temperament - I only hope that I can be as good and dutiful a human being as you were.

You have left a huge void in all our lives but I know that you are waiting for all of us up in heaven. You will be there with us in our toughest times - giving us the strength and encouragement that you always have. I can't imagine what Ammamma must be going thought right now. I have never seen both of you as two separate entities and I know the journey ahead is going to be very hard for her and Sashi anna. Don't worry - we'll be here for them, we'll do our best to make sure she doesn't feel that she has nothing to keep her going after your loss.

I thank God for giving me the chance to spend some time with you in India in December. I knew when we parted at the airport that I may be seeing you for the last time, yet I did not cry and I will not mourn your loss - that is not what you taught me. I will live my life as you taught me and try and make you proud of your pethi. I love you so much Thathoi - may your soul rest peacefully in heaven.

Your loving,
**Chinna**
**Nikki Kunchu**





## *A Dedication to our Grandfather*

There is never a more uncertain journey than life. Never sure about what would happen to us tomorrow, often we wish that some how we could look into the future and maybe change certain things, make different choices. But however far you could see, there is one thing that remains final and unchangeable - death. It is perhaps the only certain thing in life, but the irony is that it is one thing that we simply cannot come to terms with, and perhaps the reality of it strikes you the hardest when it someone you had known and loved throughout your life.

Although the death of our grandfather was a great loss to us, we are comforted by the fact that he will be with us spiritually and guide us throughout our life's journey - now and forever.

We love you Appappa and
Will always cherish you.

When I must leave you for a little while
Please do not grieve and shed wild tears,
And hug your sorrows through the years,
But start out bravely with a gallant smile
And for my sake and in my name,
Live on and do all things the same,
Feed not your loneliness on empty days,
But fill each hour in useful ways,
Reach out your hand in comfort and in cheer,
And I intern will comfort you and hold you near.

***Shamo & Subanghi***

## To my sweet Thatha

I find no word's to say my love
To a sweet Thatha like you
You are an angel of love
A Thatha who can never be forgotten

You gave me your love
You gave me many advises
And wanted us to shine in life
You were such a sweet Thatha to me

When my Mum told me that you were dead
I could not bear the pain
My heart is so heavy to know that you are gone
But no one can fill your place in my heart.

Good bye Thatha!
Om Shanthi! Shanthi! Shanthi!



***Prasho***



## Our loving Grandfather Whom we miss


It can't be imagined
Our loving grandpa
Could part us and live afar


Has the warm tender heart of God
Has turned into a cold stone

Oh! how can I bear the grief
in my heart
Could the great Lord give my grandpa
back to me

The tears I shed trickle down my cheeks
I've lost my grandpa somewhere in the mist.

Yours loving granddaughter
***Piratha.R***





## *To my dearest Thatha*

I wish to say a few words
To my dear beloved Thatha
I feel very sad to part with you
Tears fill my eyes when I think of you!

I remember the days I spent with you
I still wish you were by my side
To fondle me and ask for my kiss
To make me eat whatever you had.

I was your favourite boy,
Always your petted "Kannan"
You are always the light of my eyes
With sweet remembrance I say bye!

Om Muruga!
Om Shanthi!

***Thamby (Dharu)***



## *Especially For You!*

Though I have no one to call Thathi,
I know you are up in the sky
Looking upon me
Giving loads of smiles and kisses
Saying 'Darling Ramiya'
I miss you very much,
You have been my special friend
Bye Thathi!

***Ramiya***

## *Loving Thathi!*

I'll never forget the wonderful
Times spent with you
You'll always be held very close to my heart
Finally, the time came, when
God took my beloved Thathi away
Though I feel sad,
I know for sure, you will be happy in
Muruga's Kingdom
Where, now you find Eternal Peace
Your presence will always be with me
Dear Lord I thank thee for giving me
A kind and caring Thathi.

***Vithya***

## என் அன்புத் தாத்தாவை நான் எங்கு தேடுவேன்?

"சின்னவள், சின்னவள்" என்று
அன்பாக அழைப்பீரே தாத்தா!
இனி உங்கள் பாசத்தை எவரிடம் கேட்பேன்
எங்கே தேடுவேன்?
தனியாக எல்லோரையும் கண்ணீர் சிந்த விட்டு விட்டு
எங்கே தாத்தா போனீர்கள்?

சிலர் ஆறுதல் வார்த்தை கூறுகிறார்கள்
சிலர் அழுது புலம்புகிறார்கள்
நீங்கள் வாழ்ந்த புனித இல்லம்
வெறிச்சோடிய நிலையில் காணப்படுவதை
விழித்துப் பாருங்கள் தாத்தா!
எழுந்து வாருங்கள் தாத்தா!

அப்பம்மா கதறி அழ
பெற்றவர்கள் புலம்பி அழ
பேரப்பிள்ளைகள் தேம்பி அழ
உங்களால் தாங்க இயலுமோ தாத்தா?

குண்டுசி காலில் பட்டதும் நான் கதற
குண்டு தலையில் விழுந்ததுபோல் பதறுவீரே தாத்தா
நான் பாடசாலை செல்லும் வேளையில்
கையசைத்து வழியனுப்புவீர் தாத்தா
நான் பாடசாலை விட்டு வரும்வரை இல்ல வாசலில்
வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பீர்

எங்கள் வீட்டின் ஞான ஒளி நீங்கள்
திரு வடிவேலனின் ஞானப்பழமும் நீங்களே
உங்கள் தன் ஆத்மா இறையடியைச் சேரப்
பிரார்த்திக்கின்றோம் நாமெல்லாம்.

*உங்கள் ஆருயிர்ப் பேத்தி,*
***பூரணி - ராஜ்குமார்***



## எம் இனிய தாத்தாவுக்கு அன்பு அஞ்சலிகள்!

பாசமிகு தாத்தாவை இழந்து மனம்
பரிதவித்துக் கலங்குதே
எம் இனிய தாத்தாவைக் காண்பது இனி எப்போதென
ஏக்கமுடன் மனம் தேடுதே

வாசலில் கண்டவுடன் வாய்நிறைந்த சிரிப்புடன்
வாஞ்சையுடன் வரவேற்கும் எம் இனிய தாத்தாவே
உங்கள் உயிர் பிரிந்தாலும் - எம் உள்ளமதில்
உயர்ந்த ஓர் இடத்தில் உன்னதமாய் இருப்பீர்கள்

பேரப்பிள்ளைகளின் பெருமை பல பேசி
பேர் உவகை கொள்ளும் தாத்தாவே
உங்கள் பெருமை பேசி தினம் உங்களை எண்ண வைத்து
உத்தமனார் திருவடிக்கே தேடிச் சென்றீர்களோ

கும்பிட்ட பலனும் குறையில்லா மனமும்
கொடுக்கின்ற பண்பும் கொண்ட தாத்தாவே
ஆண்டவனின் பாதங்களை அரவணைத்துக்கொண்டு
அணையாத ஜோதியாய் எம் மனதில் இருப்பீர்கள்.

ஓம் சாந்தி!

***பிரஷோ, தரு (கண்ணன்)***

## *Mr. V. Sabaratnam*

It is indeed with shock and sadness that we, friends and colleagues of Mr. Velupillai Sabaratnam received the news of his demise.

Mr. Sabaratnam joined the Department of Excise on 16-08-1983 as an Excise Inspector. He served in several stations throughout the Island including Kurunegala, Gampaha, Hambanthota, Kankesanthurai, Negombo, Colombo City, and Jaffna. Wherever he worked Saba carried out his duties most efficiently, winning the confident of the superiors and the respect of the subordinates. Saba cut a most imposing figure with his personality that stood out in any crowd. He was a most imposing figure with his personality that stood out in any crowd. He was a most dutiful and dedicated officer that volunteered to any assignment. This big man with a big heart knew not what fear was. The commendations and special awards he won, for very good performances were numerous and only a very few others could come closer to the standards maintained by him. The superiors assigned special tasks to Saba, and the subordinates went up to him for advice and help when they were in need. Saba was ever ready to help and



advice, in all the situations, without considering cast or creed.

Saba got promotions as the years passed by and in the year 1973 he rose to the rank of Assistant Commissioner of Excise and was posted in charge of the Northern Division, which post he held up to his retirement in June 1980. No one was able to fill the vacuum created with his retirement, which prevails even now. He was a very affectionate friend to his colleagues, and a very respected superior among subordinates. I feel that I fail in my duty if I do not mention here that he was a source of inspiration and help to all the Sinhala officers who were stationed in the Northern Division, during his period as the Assistant Commissioner of Excise, under all circumstances. Hailing from a very respectable and an outstanding family from Jaffna, Saba showed superior qualities throughout his carrier in the Department of Excise. Though he was capable of tackling any situation Saba never implicated an innocent person in a case and was never responsible for penalizing an officer with deterrent punishment, he instead took steps to correct officers and put them in the correct path.

I was privileged to have him as a close friend for over 58 years and I would visualize the memorable good time we had. With all fine qualities and blessings my loving friend Saba was unfortunate to witness the tragic demise of his son Shanthikumar, who was a Police officer who never stooped down to corruption, a cop with every high level of integrity and honesty, about two years ago. This truly effected his life, and since the demise of Shanthikumar, he was never the old smiling Saba that we knew. Saba the gentleman with starling qualities, lover· of mankind, and an affectionate friend and batch mate of ours is no more.

I join with my colleagues who joined the Excise Department along with Saba, Mr. W.N.F. Chandraratne retired Commissioner General of Excise, and all other Excise officers who were his subordinates in the Department of Excise, to extend our deepest sympathies to his beloved wife and children. May the Gods grant him eternal bliss.

**_Neil Weerasighe_**

*Retired Superintendent of Excise*





# எப்பிறப்பில் காண்போம் இனி!

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டு தைத்திங்கள் ஆறாம் திகதி (06-01-1953) நண்பகல் ஒருமணியளவில் என் தந்தையாரின் வாகனம் எங்கள் வாசலில் வந்து நிற்கிறது. தந்தையை வரவேற்க வாசலுக்கு ஓடிய நான், முன்னொருபோதும் காணாத, ஆறடி உயரம், அதற்கேற்ற உடல்வாகு, களையான முகம் கொண்ட ஓர் இளைஞன் வாகனத்தில் இருந்து இறங்குவதைக் கண்டு சற்றுப் பின்வாங்கி னேன். எனினும் எங்கள் கலாசாரப் பண்பிற்கு இணங்க வந்தவரை உபசரித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றேன். நூல் நிலையத்திற்குச் சென்றிருந்த என் கணவரும் வீடு திரும்பியிருந்தார்.

“மகளே! இவர் பெயர் சபாரத்தினம். உன் தங் கைக்கு நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளை. தற்பொழுது கம்பஹா எனும் இடத்தில் வேலைபார்க்கிறார். உங்க ளுக்கு அறிமுகம் செய்துவைக்கக் கூட்டிவந்தேன்” என அவருக்கே உரித்தான சிம்மக் குரலில் கூறினார் என் ஐயா.

எம் தந்தை போடும் கணக்கு என்றுமே தப்பாது என்பது தலைமகளாகிய எனக்குத் தெரியாமலாபோகும். மாப்பிள்ளை என் தங்கைக்கு ஏற்றவர் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. எனினும் சில சோதனைகள் செய்ய விரும்பினேன். என்னவர் எனக்குத் துணைவர “என்ன குடிக்கிறீர்கள்? Bear ஆ Whisky ஆ என என்னவரைக் கொண்டு கேட்பித்தேன். 'Soft Drink" எனப் பதில் வந்தது. கொடுத்துவிட்டு சிகரெட் பெட்டி யையும் அருகில் வைப்பித்தேன். தான் புகைப்பதில்லை என்றார். பதிலில் திருப்தி கொண்ட போதிலும், “ஆள் பெரிய ஆசாமியாக இருப்பாரோ” என்று ஐயாவிடமும் கணவரிடமும் கூறியபோது இருவரும் விழுந்து, விழுந்து சிரித்தது இன்றுபோல் இருக்கிறது.

என் தங்கையும் சாமான்யமானவள் அல்ல. அழகி, படிப்பு, எழுத்தாற்றல், மேடைப்பேச்சு, சமையல் எல்லாவற்றிலும் திறமை கொண்டவள். அக்காவாகிய என்னைத் தன் உடல் வலிமையைக் காட்டி வெருட்டி வைத்தவள்.

1953ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி திருசபாரத்தினம் அவர்கட்கும், என் தங்கை யோகமணிக் கும் பதிவுத் திருமணம் நடந்தேறியது. “இலங்கை சுதந்திரம் அடைந்த நாள், நான் என் சுதந்திரத்தை இழந்தநாள் எனச் சொல்லிச் சிரிப்பார் என் அத்தான்”.

இருவரும் மலரும், மணமும், நகமும் சதையும் போல என்பார்களே அதற்கும் ஒருபடி மேலாக,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனுமது”

என்ற வான்புகழ் வள்ளுவன் வாக்கிற்கமைய இல்லறவாழ்வை நல்லறமாகவே வாழ்ந்தனர். வாழ்க்கை யின் பயனாக சிவகுமார், ஷாந்தி குமார், பிரேம்குமார், ராஜ்குமார், சூரியகுமார் எனப் பஞ்சபாண்டவர் போல் ஐந்து ஆண்மக்களையும், அருமையாக சுபாஷினி எனும் மகளையும் பெற்றனர். நல்லதோர் கணவனா கவும், பாசமுள்ள தந்தையாகவும் தக்க தலைவனா கவும் எக்குறையுமின்றி குடும்பத்தை நடாத்தினார். அதுமட்டுமல்ல பிறந்தவீடு வேறு, புகுந்தவீடு வேறு என்ற வேற்றுமையின்றி எங்கள் வீட்டையும் தனதென நேசித்துத் தன்கடமைகளை குறைவற நிறைவேற்றினார். உற்றபோது எவர்க்கும் உதவுவார் அத்தான்.

தன் இஷ்ட தெய்வமாகிய முருகனைத் தினமும் பூசிப்பார். காலம் தாழ்த்தி வீடு வந்தாலும், சுவாமியறை சென்று தீபமேற்றி, முருகனைக் கும்பிட்ட பின்னரே உணவருந்துவார். “முன்வினை அறுப்பவனும், போகும் வழிக்குத் துணைவருபவனும் முருகனே” என்பார், தினமும் நல்லூர்க் கந்தனிடம் போய்வந்த அத்தான், வருடம் தோறும் கதிர்காமத்திற்கும், திருச்செந்தூருக் கும் யாத்திரை போவார்.




காலத்தின் கோலமோ இல்லை காலமெலாம் கையெடுத்த கலியுகவரதன் கந்தன் தன் திருவடியில் சேர்க்கத் திருவுளம் கொண்டானோ, கடந்த சில மாதங்களாக நோய் கொண்டார். தந்தையின் நோய் கண்ட மக்கள் துடித்தனர் - துவண்டனர். பணம் எமக் குப் பெரிதல்ல. அப்பாவின் நோய் தீர்ந்தால் போதுமென எந்த வைத்தியசாலை திறமோ அங்கெல்லாம் கொண்டு சென்றனர்.

கணவன் பணியைத் திறம்படச் செய்து, பெரும் புகழ் பெற்றுக் காவிய நாயகிகளாக விளங்குபவர்கள் கண்ணகி, அருந்ததி, நளாயினி போன்ற மாதர் தில கங்கள். இன்று அவர்களை நாம் காணாத நிலையிலும் கூட நம் வாழ்க்கையின் வழிகாட்டலுக்கு அவர்களை நினைவு கூர்கின்றோம். நோய் கண்ட தன் கணவன் மனம் கோணாமல், தன் சுகம் பேணாது, அவர் பணி செய்வதே தன் கடனென, இரவு பகலாக அவரைத் தாங்கி, தூக்கி, உணவூட்டிக் காத்தாளே கலியுகக் கண்ணகி - என் சகோதரி, அவளைத் தங்கையாகப் பெற்றதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

என்னதான் அவள் கஷ்டப்பட்ட போதிலும் விதியும் விளையாட வேண்டுமே. பிறந்தவர் இறப்பது நியதி யல்லவா? 2002ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 2ம் நாள் (15-04-2002) எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயிலில் மூழ்கிவிட்டார். எப்பிறப்பில் காண்போம் இனி எங்கள் ஜமீன்தாரை? இது நான் என் அத்தானுக்கு வைத்த புனைபெயர். அத்தானின் ஆத்மா சாந்தியடையவும், என் உடன்பிறந் தாளினதும், மக்களினதும் நொந்த இதயங்கள் ஆறுத லடையவும் நிமலனை நித்தமும் கைதொழுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**மைத்துனி ராணியும்**
**கணவர் தங்கராஜுவும்**

# எங்கள் வலது கையை இழந்து விட்டோம்...

நினைத்துப் பார்க்கிறேன். அரை நூற்றாண்டுகளுக்கு முன் என்னவருடன் ஒருமித்து வேலை புரிந்த தொடர்பினால் எங்கள் அறிமுகம் ஆரம்பம். அதன்பின் ஏற்பட்ட அளப்பரிய நட்பும், 1956ம் ஆண்டு நிகழ்ந்த எங்கள் திருமண விழாவில் முன்வீற்றிருந்த அன்னாரும், அவரின் பாரியார் என் அன்பிற்குரிய Mrs. சபா எமக்குப் போட்ட மாலையும், இனிய நகைச்சுவையான வாழ்த்துக்களும் இன்னும் என் மனதில் பசுமையாக நினைவிருக்கிறது. அன்று தொட்டு, இரு குடும்பமும் இணைபிரியா நண்பர்களாகி விட்டோம்.

என்னவருக்கு 'Sir' ஆகி, எனக்கு உடன் பிறவா அண்ணாவாய், என் பிள்ளைகளுக்கு சபா Uncle ஆக எங்கள் உறவுகள் தொடர்ந்தன. என்னவரும், நானும், பிள்ளைகளும் அவர்கள் ஆனைப்பந்தி இல்லத்தில் கழித்த நாட்கள் என்றுமே பசுமையானவை. என்னவரின் திடீர் மரணச் செய்தி கேட்டு, கொழும்பில் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டிருந்த நிலையிலும் கூட, நாட்டின் அமைதி குழம்பிய பயங்கரமான சூழ்நிலையிலும், தன் அருமைத் துணைவியை என்னவரின் இறுதிக் கருமங்களில் பங்குபற்றி உதவிபுரியும்படி அனுப்பி வைத்தார். ஒன்று, இரண்டல்ல - எத்தனையோ இன்னல்கள் நடந்தபோதிலும், அன்னாரும் அன்னாரின் பாரியாரும் தங்களால் இயன்ற உதவியை எம் குடும்பத்திற்குச் செய்தனர்.

பக்தி வழியில் நம்பிக்கை கொண்ட இணைபிரியா சோடிப் புறாக்கள், தினமும் காலையும், மாலையும் நல்லூர்க் கந்தனைத் தரிசித்து வந்தனர். பூரண



வாழ்வு வாழ்ந்து, தான் பெற்ற அரிய செல்வங்களுக்கு நல்ல துணைகளைத் தேர்ந்து எடுத்து, அவர்கள் குழந்தைகளுடன் நல் வாழ்வு வாழ்வதைக் கண்டு மகிழ்ந்தார். நிமிர்ந்த நடை, நேர்மையான வாக்கு, புன்சிரிப்பு, தான் நினைத்ததை செயலாற்றும் திறமை, எவருக்கும் பின் நிற்காது உதவும் இயல்பு என்பன இவரின் சிறப்பான குணங்கள்.

கடைசியாக 2001 மே மாதத்தில், நான் கொழும்பு சென்றிருந்தபோது அவர்கள் இருவருடனும் ஒன்றாய் இருந்து, மீண்டும் பழைய வாழ்க்கையை இரைமீட்டு மகிழ்வாய் இருந்த கணங்கள் மறக்க முடியாதவை. ஒன்றாய் இருந்து உணவருந்தியதும், TV பார்த்ததும் நேற்றுப்போல் உள்ளது. இது தான் என் உடன்பிறவா அண்ணாவைக் கடைசியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் என்று நான் ஒருபோதும் நினைத்திலேன். அவர்கள் இருவரும் நோய்வாய்ப்பட்ட நிலையில் கூட, மற்றவர்களை ஒருவிதத்திலும் கஷ்டப்படுத்தாது, இறக்கும்வரை இன்பமாகவே இல்லறம் நடாத்தினர்.

நானும் என் அருமைப் பிள்ளைகளும் அவரின் இறுதிச்சடங்கில் முக்கியமாகப் பங்குபற்ற வேண்டியவர்கள். கண்டங்களால் பிரிக்கப்பட்டு, குற்ற உணர்வுடன் தொலைபேசியில் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டோம். அவரின் புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைக்காத நிலையில், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிக்கொள்கிறேன். பிரிந்துவாழப் போகும், என் அன்பிற்குரிய Mrs. சபாவிற்கும், என் பிள்ளைகளின் நேசமிகு Aunty க்கும், அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எங்கள் அனைவரின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

என்றும் உங்கள் அன்பிற்குரிய,



**Mrs. சிவாவும் பிள்ளைகளும்**

கனடா

# *Appreciation to an officer and a Gentleman*

Mr. Velupillai Sabaratnam retired Assistant Commissioner of Excise popularly known as "Saba" among his colleagues and contemporaries is no more. He got a divine call on 15th of April 2002. There was no way to stop it.

He rails from an illustrious family at Athiaddy Jaffna and was a distinguished product of Jaffna Central college of which he was fiercly proud of.

A veteran versatile officer and a gentleman, was very much liked and held in high esteem by the rank and file of the department throughout his unblemished career.

He joined the department as an Inspector at the age of 21 years. He started his youthful career at Gampaha Excise Station as a strong-willed, well-built, smart, tough, fearless lad. At Gampaha he raided illicit hooch dens relentlessly and earned a good name for the department and himself. The Excise Commissioner then late Mr. Loos and successive Excise Commissioners after him, were able to identify his talent and potential and kept him at key positions even overlooking senior officers.

He was rewarded for his self sacrificing devotion and dedication for the job, in 1970 he was



elevated to the rank of Superintendent of Excise when promotional prospects from the inspectorate to the staff grade was very bleak in the department. Within two years he again gained a promotion to the rand of Assistant Commissioner of Excise and continued to serve in that post at Jaffna district until he retired from service in 1980 when he was 58 years of age.

His administrative ability as a staff officer coupled with academic acumen was of par excellence. His flowing Parker pen was mightier than a sword, which ability even the degree holders who were recruited directly to the staff post didn't possess.

He is a devout orthodox Hindu with an unfailing devotion to Hindu values and principles of his life. He never failed to pull the rope of the "CAR" in which the deity of the lord "Skanda" is taken round during the annual festival at Nallur Kandasamy Kovil. His presence on that day was conspicuously felt by everyone because of his prominence.

His demise is an irreparable loss to the bereaved beloved members of family members of the excise fratemity and the community as a whole.

May his soul attain "Moksha".

***S. Sivananthan***
A.C.E.
Jaffna District

# மனங்களில் நிறைந்த மாமனிதர் வேலுப்பிள்ளை சபாரத்தினம்

பிறக்கும் மனிதர்கள் இறப்பதும், இறந்துவிட்ட பின் அவரை நினைத்து வேதனைப்படுவதும் இம்மனித குலத்துக்கே இயல்பான ஒன்று. தமது புகழை, பெருமையை உலகறிய வைத்தவர்களை மட்டுமே இவ்வுலகம் இன்னும் பாராட்டிக் கொள்கிறது. எந்தப் புகழையும், எந்தப் பெருமையையும் வெளியிலே பாராட்டிக் கொள்ளாது அமைதியாய், ஆறுதலாய் ஒரு முழுச் சமூகத்துக்கே நல்லூக்கம் கொடுத்து முன்னேற்றப் பாடுபடும் நல்ல உள்ளங்களின் பெயர்கள் வெளியே வருவதில்லை. அப்படியான ஒரு வகைக்குள் வரத்துடித்த எம் நெஞ்சு மறக்காத பண்பாளன்தான் திரு. வேலுப்பிள்ளை சபாரத்தினம் அவர்கள்.

உதவி என்று சொல்லமுன் மனமுவந்து தேவையானவற்றைச் செய்யத் தவறாத கடமையுணர்வு அவரிடத்தில் மிகுதியாக நிறைந்திருந்தது.

“இல்லறத்தான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.”

என்று நாம் அறியும் உண்மை இவரது வாழ்விலேயே எம் கண் முன்னால் அறியக்கூடியதாய் இருந்தது. அவரது உண்மை உணர்வுகளை யதார்த்தமாக



ஏதோ அவர் இந்த வேளையிலாவது வெளிச் சொல்வதற்கு எம்மை அனுமதித்ததையிட்டுத் துன்பத்திலும் ஆறுதலடைகிறோம். எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல. நாம் எவ்வளவு சிறப்போடு வாழ்ந்தோம் என்பதே முக்கியம். இதுவே மனித வாழ்க்கையினை உண்மையாக அளவிடும் அளவுகோலாகும். அமரரின் வாழ்வு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தனக்கென்றே வாழ்பவன் மனிதனல்ல. பாதி தனக்கும் பாதி பிறர்க்குமாக வாழ்பவன் மனிதன். பிறர்க்கென்றே வாழ்பவன் தேவன்.

எப்படியெல்லாம் வாழவேண்டுமோ அப்படியே நல்ல பண்பாளனாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட அமரரின் ஆத்ம சாந்திக்காக அனைவரும் பிரார்த்திப்போமாக.

**டாக்டர் குமாரசாமி நந்தகுமார்**
அகில இலங்கை சமாதான நீதிபதி,
விஞ்ஞான ஆசிரியர்,
றோயல் கல்லூரி, கொழும்பு-07.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

பவளமால் வரையில் நிலவெறிப்பது போல்
பரந்த நீற்றழகு பச்சுடம்பில்
திவள மாதுடன் நின்றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு
கரத்தில் தரித்துயர் கிரிப்புறத்தெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்து கைதொழுவாம்.

*தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட*
*வித்தக விநாய விரைகழல் சரணே!*

## அம்பிகை துதி

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவ நெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர் கோண்
அமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரிபூங் கழல் போற்றி!

*அன்பர் என்பவர்க்கே நல்லன வெல்லாம் தரும்*
*அபிராமி கடைக் கண்களே!*



## சிவன் துதி

கற்பனை கடந்தசோதி
கருணையே உருவமாகி
அற்புதக்கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோகமாகும் திருச்
சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற
பூங்கழல் போற்றி போற்றி.

*குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே*
*கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே.*

## முருகன் துதி

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி!

*வித்தகா ஞானசத்தினி பாதா*
*வெற்றி வேலாயுதப் பெருமாளே.*

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

கண்க ளிரண்டு மவன்கழல்
கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென்
வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு
மாறு மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாத
மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களி கூர்தரு பாடலொ
டாடல் பயின்றிடு மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்பட மாயிடிலே.

ஒன்றினொ டொன்றுமோ ரைந்தினொ
டைந்துமு யிர்ப்பது மாகாதே
யுன்னடி யாரடி யாரடி
யோமென வுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென
வந்த கணக்கது வாகாதே
காரண மாகு மனாதி
குணங்கள் கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த
நடுக்க நடந்தன வாகாதே
நாமுமே லாமடி யாருட
னேசெல நண்ணுது மாகாதே
யென்றுமெ னன்பு நிறைந்த
பராவமு தெய்துவ தாகாதே
யேறுடை யானெனை யாளுடை
நாயக னென்னுள் புகுந்திடிலே.



## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணாநாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழிமிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கள் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்
பெற்றதார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

வெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
றிருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைமல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவா நீஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க என்றார்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக ணடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய் அதிதீரா
அத்துய ரதுகெடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.



நாதவிந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீர நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே மாகயி லையிலேகி
ஆதியந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நன்னாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



### ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் கபளச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளிக்
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி

சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷ்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

*(விநாயகர் அகவல் முற்றிற்று.)*



# கோளறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ த
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமே
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தெ
னுளமே புகுந்து அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்ற நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7



வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே, 11

# திருவாசகம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

## சிவபுராணம்

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம்என்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்



அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்ய விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே




ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரி பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

(பதிகம் முற்றிற்று)

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ கருமாரி தோத்திரம்



கற்பூரநாயகியே! கனகவல்லி
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னைநீயே. (கற்பூர) 1

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீ யாதரி. (கற்பூர) 2



உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ – அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவனின் குரல் கேட்டுன் முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழிஅனுப்பு! (கற்பூர) 3

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா. (கற்பூர) 4

நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெலாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா! (கற்பூர) 5

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணு க்கு இமையின்றிக் காவலுண்டோ!
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ!
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணெய்க்கும் விளக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ! (கற்பூர) 6

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்
வஞ்சகத்தை என்னெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும். (கற்பூர) 7

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை!
நடத்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!
செம்பவள வாயழகி! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை. (கற்பூர) 8

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்!
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை. (கற்பூர) 9





# கந்தசஷ்டி கவசம்

**காப்பு**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்



நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்



பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக

விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!



காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய

அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)



## பட்டினத்தார் பாடல்

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம் போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழுக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடி வைப்பரோ விறைவா கச்சி யேகம்பனே.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை; பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குமாமருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே.


அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னம் யெத்தனை யெத்தனை செம்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய்வேன் கச்சி யேகம்ப நாதனே!

முடிசார்ந்த மன்னரு மற்றுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவாரில்லயே.

## தேற்றம்

நல்லூர் தலத்து கந்தன் தரிசனத்தில்
அல்லும் பகலும் தன்னை அர்ப்பணித்து
எல்லோரும் ஏத்த ஏற்றமுற வாழ்ந்து
நல்லோர் புடைசூழ நண்ணினான் கந்தன் கழல்.

உ
சிவமயம்



# நன்றி நவில்கின்றோம்!

எங்கள் இதயத்தெய்வம் **அமரர் திரு. வேலுப்பிள்ளை சபாரட்ணம் அவரகள்** தம் ஈமக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்தூவி, மலர் வளை யங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்ளூரிலும் வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், அந்தியேட்டி-சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்துகொண்டவர் களுக்கும், சகல கிரியைகளையும் நடாத்திவைத்த அந்தணப் பெரியோர்களுக்கும், கிரியைகளில் பரமன் புகழ் பாடியவர்களுக்கும், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது பணிவான நன்றியை நவில்கின்றோம்.

இங்ஙனம்,
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

ஹரே கிருஷ்ணா! ஹரே ராமா!



## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"**

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

Printed by: Luxmi Printer - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 448545, 473533, 458273 Fax: 330588